ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல் மாதப் பத்திரிகை

பரிதாபி
ஐப்பசி

November
1972



தொகுதி 34
பகுதி 11

Vol. 34
No 11

ஆசிரியர் & பிரசுரகர்த்தா
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

| | | |
|---|---|---|
| மருத்துவச்செலவு திரும்பப்பெறுதல் | ... | 205 |
| கிருமி ரோகம் | ... | 206 |
| ரக்த ஸ்தம்பம் | ... | 209 |
| பாண்டு ரோகம் (3) | ... | 213 |

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

## வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

### கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered THE ARYA VAIDYA SALA KOTTAKAL Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன்
போன் நெ. 31

| | | |
|---|---|---|
| நர்ஸிங்ஹோம் | | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | | போன் நெ. 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) | போன் நெ 27 |
| | (ஆபீஸ்) | போன் நெ 61 |
| மானேஜர் | (வீடு) | போன் நெ. 26 |

**சென்னை கிளை :**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள் :**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும் எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனே அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

**ஸௌபாக்கிய ரஸாயனம்**

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

**பயஸ்யா**

தாய்ப்பாலே வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5-50

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

**M|s. Kalia Brothers (Regd.)**

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram : KALIA** Phone : **Office - 3232**
**Resi - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு
அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

**கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]**

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,
ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி : KALIA போன் : ஆபீஸ் – 3232
வீடு – 4343

தந்தி : " அம்ருதம் " P, B. No. 1382. போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD.

AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

எங்களுடைய கிளைகள் :

| | | |
|---|---|---|
| 1. | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன் : 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-16 | ,, 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி பொன்னனி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | 33758 |
| 12. | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | 842 |
| 14. | No 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னனி) | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சமபந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும.

ரத்த அழுத்தம் [ப்ளட் ப்ரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].



# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 34 | பரிதாபி ஐப்பசி | பகுதி 11 |
| Vol. 34 | 1972 நவம்பர் | No. 11 |


श्री धन्वन्तरये नमः

## மருத்துவச்செலவு திரும்பப்பெறுதல்

மத்திய அரசாங்கச் சிப்பந்திகளும் அவர்களது குடும்பத்தினரும் ஆயுர்வேத சித்த யூனானி ஹோமியோபதி முறைகளின் மூலம் சிகித்ஸை பெறும்போது அவைகளுக்காகும் செலவை மத்திய அரசாங்கம் ஈடு செய்யும். இது 15—10—1972 அன்றிலிருந்தே அமுலுக்கு வந்துள்ளது. அலோபதி வைத்திய முறையில் செய்து கொண்ட சிகித்ஸைக்கு மட்டுமே அளிக்கப் பெற்றுவந்த இந்தச் சலுகை நாட்டு வைத்ய முறைகள் ஹோமியோபதி முறை விஷயத்திலும் தளர்த்தப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார கவுன்சில் ராஜ்ய சர்க்கார்களையும் இந்த சலுகையை அளிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது. ஏற்கனவே சில ராஜ்ய சர்க்கார்கள் இதை ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழ்நாடு அரசாங்கமும் விரைவில் இதை நடைமுறைக்குக் கொணரும்படி கோருகிறோம்.

# கிருமி ரோகம்

நிதானம் : கிருமிகள் பாஹ்யம் ஆப்யந்தரம் என இருவகை வெளிமலம், கபம், ரத்தம, புரீஷம் என்ற நான்கு உற்பத்தி ஸ்தலங்களை யொட்டி நான்கு வகைப்படும். இவை இருபது விதமாகக் காணப்படும்.

வெளிமலத்தில் ஏற்படுபவை யூகா (தலைப்பேன்) லிக்ஷா (சீலைப்பேன்) என்பவை. இவை கேசத்திலும் துணிமணிகளிலும் உள்ள அழுக்குகளால் ஏற்படுபவை. எள்ளுருவத்திலிருப்பவை. இவை அரிப்பை ஏற்படுத்தி சினப்பு, கட்டி, கண்ட கிரந்தி, வீக்கம் இவைகளை ஏற்படுத்தும்.

ஜீர்ணமாகாத உணவு, புளிப்பு இனிப்பு மிக்க உணவு, திரவ மிகுதியான உணவு, மாவுப்பண்டம், வெல்லம், ஒன்றுக் கொன்று முரண்பட்ட உணவு இவைகளை அதிகமாக உண்பதும் பகல் தூக்கமும் தேகப்பயிற்சின்மையும் கிருமி தோயின் காரணமாகும்

உளுந்து. அதிக உப்பு, மாப்பண்டம், வெல்லம் கீரை இவை களால் புரீஷத்திலும், மாம்ஸம். உளுந்து, வெல்லம், பால். தயிர், இவைகளால் கபத்திலும், விருத்தமான உணவு, ஜீர்ணமாகாத உணவு, கீரை வகை இவைகளால் ரக்தத்திலும் கிருமிகள் அதிக மாகும்.

கிருமி உண்டானதன் குறிகள்: ஜ்வரம், உடல்நிறம் வெளுத்தல் வயிற்றுவலி, ஹிருதயநோய், வாந்தி, தலைசுற்றுதல், உணவில் வெறுப்பு, அதிஸாரம் இவை கிருமிகள் ஏற்பட்டதன் அடையாளம்.

கபஜக்ருமிகள் – குறிகள் : கபத்தால் ஆமாசயத்தில் கிருமிகள் உண்டாகி உடல் முழுவதும் பரவும். சில பெருங்குடல் போலவும் சில நாக்குப் பூச்சிப் போலவும் சில முளைவிட்ட தான்யம் போலவும் மெலிந்து நீண்டும் மிகச் சிறிய உருவிலும் வெண்மை – தாமிர நிறம் கொண்டும் இவை காணும். இவை ஏழு வகை-அந்திராதம், உதராவேஷ்டம், ஹிருதயாதம். மஹாகுஹம், சு (கு) ரு, தர்ப்ப குஸுமம், ஸுகந்தம் என, இவைகளால் உமட்டல், வாயில் ஜலம் ஊறுதல், அஜீர்ணம். அருசி, மூர்ச்சை, வாந்தி ஜ்வரம். வயிற்று உப்புசம் இளைப்பு, தும்மல் சளி இவைகளை உண்டாக்கும்.

ரக்தஜக்ருமிகள்–குறிகள் : பக்வாசயத்தில் மலத்தில் உற்பத்தி யாகி இவை கீழ் நோக்கிச் செல்பவை. வளர்ந்ததும் ஆமாச யத்தை நோக்கிச் செல்லும். அப்போது அருசி, ஏப்பம், பெரு மூச்சு, மலபந்தம் இவைகளை உண்டாக்கும். உருண்டையாயும் பெருத்தும் மெலிந்தும் தடித்தும் மஞ்சளாகவும் வெளுத்தும் காணும். ககேருகம், மகேருகம், ஸௌஸுராதம், ஸலூனம், லேலிஹம் என ஐந்து வகைப்படும். மலமிளகிப் போதல், வயிற்றுவலி, மலக்கட்டு, இளைப்பு, வரட்சி, பாண்டு, மயிர்கூச்சல், அக்னிமந்தம், குதத்தில் அரிப்பு. இவைகளை உண்டாக்கும்.

சிகித்ஸை :

கோரைக்கிழங்கு, எலிச்செவியிலை, திரிபலை, தேவதாரு, முருங்கைப்பட்டை இவைகளின் கஷாயத்தில் திப்பிலி வாய் விடங்கம் இவைகளை அரைத்துக் கலக்கிச் சாப்பிட மேலும் கீழும் நோக்கிச் செல்லும் கிருமிகளைப் போக்கும்.

மாதுளம் பட்டையின் கஷாயத்தில் நல்லெண்ணெய் சேர்த் துச் சாப்பிட மூன்று நாட்களில் கிருமிகள் ஒழிந்துவிடும்.

கருங்காலிக்கட்டை, வெட்பாலைப் பட்டை, வேப்பம்பட்டை, வசம்பு, திரிகடு, திரிப்லை, செவதை வேர் இவைகளின் சூர்ணத்தை கோமூத்ரத்தில் கலக்கி 7 நாட்கள் சாப்பிட கிருமிகள் நீங்கும்.

குரோசாணி ஓமத்தை அரைத்து வெல்லம் சேர்த்து முதல்நாள் பிடித்து வைத்திருந்த ஜலத்தில் கரைத்துச் சாப்பிட நல்லது.[1]

மலை வேப்பிலைச்சாற்றில் தேன் சேர்த்தும் அவ்விதமே சாலிஞ் சக்கீரைச்[2] சாறும் தேனும் அல்லது சேம்புக்கிழங்கின் சாறும் தேனும் சாப்பிட நல்லது.

வாய்விளங்கத்தின் தூளைத் தேன் கலந்து சாப்பிடலாம்.

---

1. வெல்லம் நேரிடையே கிருமியை உண்டுபண்ணக் கூடியதே எனினும் குடலில் மறைந்து ஒட்டிக் கொண்டுள்ள கிருமிகள் வெல்லத்தின் ஆசையால் வெளியே வரும்போது மருந்தின் சக்தி அதை மாய்த்து வெளிக் கொணரும் என்ற கிரியா யுக்தி கவனிக்கத் தக்கது.

2. சாலிஞ்சகாக் என்பது வங்கத்தில் கிடைக்கும். இதற்குப் பதிலாக சாணக்கிக் கீரையை உபயோகிக்கலாம்.

புரசம் விதையின் ஸ்வரஸத்தைத் தேன் விட்டுச் சாப்பிடுவதும், புரசம் விதைக் கல்கத்தை மோரில் கலக்கிச் சாப்பிடுவதும் நல்லது.

பேரீச்சை இலை கஷாயத்தைத் தேன் சேர்த்து ஓரிரவு வைத்திருந்து மறுநாள் சாப்பிட நல்லது.

பச்சைப்பாக்கை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துக் குழப்பிச் சாப்பிடுவதும் பேரீச்சை இலை ஸ்வரஸத்தையும் எலுமிச்சம்பழச் சாற்றையும் சேர்த்துச் சாப்பிடுவதும் நல்லது.

சுரை விதையை மோரில் அரைத்துக் கலக்கிச் சாப்பிடலாம். இளநீரில் தேன் விட்டுச் சாப்பிடலாம். கம்பிப்பாலை (கமேலா) 5 யவ அளவு தூள் செய்து வெல்லத்துடன் சாப்பிடலாம்.

ஓமம் 30–யவம் இந்துப்பு சேர்த்துச் சாப்பிட கிருமி அஜீர்ணம், ஆமவாதம் இவை நீங்கும்.

நிம்பஷட்கம் : வேப்பம் பட்டை, வெட்பாலையரிசி, வாய் விடங்கம், இந்துப்பு பெருங்காயம், ஓமம் இவைகளின் சூர்ணம் தேன் சேர்த்துச் சாப்பிட கிருமிகள் வெளியாகும்.

எலிச்செவி இலை சேர்த்து மாவுடன் அப்பம் சுட்டுச் சாப்பிட்டு மேல் காடி சாப்பிடலாம்.

ஸௌவர்ச்சிகாதி சூர்ணம் : ஸௌவர்ச்சில உப்பு, பெருங்காயம், ஜாதிபத்திரி (பச்சிலை) வாய்விளங்கம், திப்பிலி, செவதை வேர் பட்டை, சுக்கு, ஓமம், கண்டந்திப்பிலி, கோரைக்கிழங்கு இவைகளின் சூர்ணம் மோருடன் கலக்கிச் சாப்பிட கிருமிகள் நீங்கும்.

சேங்கொட்டை சுத்தமானதைத் தயிரிலோ புளிச்சாற்றிலோ சாப்பிடலாம் வேப்பிலையை அரைத்துப் பெருங்காயம் சேர்த்துச் சாப்பிடலாம்.

வேப்பம்பட்டை அல்லது வேப்பிலை, ஓமம், வாய்விளங்கம், புரசவிதை, பூலாங்கிழங்கு, பெருங்காயம் இவைகளின் சூர்ணம் வெல்லம் சேர்த்துச் சாப்பிடலாம்

கடுக்காய்த் தோல், மஞ்சள், ஸௌவர்ச்சில உப்பு இவைகளை ஸம எடை சேர்த்து சூர்ணித்து பேய்த்தும்மட்டிச் சாற்றில் ஊற வைத்துக் காயவைத்துச் சாப்பிடலாம்.

பலாச பீஜாதி சூர்ணம்: புரசம்விதை, வெட்பாலை யரிசி, வாய்விடங்கம், வேப்பம்பட்டை, நிலவேம்பு இவைகளின் சூர்ணத்தை வெல்லம் சேர்த்துச் சாப்பிட 3 நாட்களில் கிருமிகள் நீங்கும், புரசம் விதையையும் ஓமத்தையும் சேர்த்துத் தூள் செய்து சாப்பிடலாம்.

பாரஸீகாதி சூர்ணம்: குரோசாணி ஓமம், கோரைக் கிழங்கு, திப்பிலி. கர்கடசிங்கி, வாய்விளங்கம் அதி விடயம், இவைகளின் சூர்ணம் தேனுடன் சாப்பிட காஸம், ஜ்வரம், அதிஸாரம், வாந்தி, கிருமி இவைகள் நீங்கும்,

பேன் நீங்க உபாயங்கள் :

விடங்காதி நைலம் வாய்விளங்கம் மனேசிலை இரண்டையும் கோமூத்திரத்தில் அரைத்துக் கலக்கி கடுகெண்ணெய்யில் விட்டுக் காய்ச்சி வடிகட்டி கேசத்தில் தடவிக் கொள்ள பேன் ஈறு உபத்திரவம் நீங்கும்.

ரஸத்தைக் கரு ஊமத்தைச் சாற்றிலோ வெற்றிலைச் சாற்றிலோ அரைத்துத் துணியில் தடவி அந்தத் துணியை 3 யாம நேரம் தலையில் கட்டிக் கொள்ள பேன்கள் மயங்கி விழுந்துவிடும்.

கொடிவேலி வேர்பட்டை, தந்திமூலம், பேய்ச்சுரை இலை இவைகளை அரைத்துக் கல்கமாக்கித் தலையில் பூசிக் கொள்ள பேன்கள் சாகும்.

—————

# ரக்த ஸ்தம்பம்

———

ரத்தம் ஓரிடத்தில் அதிமாகச் சேரவும் வாதாதிகள் சீர் கேடடையவும் உதவும் ஆஹார விஹாரங்களால் ரத்தம் கெட்டு ஓரிடத்தில் சேர்த்து ஸ்தம்பித்து நின்று ஓட்டம் தடைபட்டு வாதத்தின் ஸஞ்சாரத்தையும் தடைசெய்கின்றது வாயுவின் மார்க்கத்தில் தடை ஏற்பட்டதும் மேலும் மேலும் அந்த வாயுவினுல் ரத்தம் வரண்டு ஆங்காங்கு கைகால்களில் குஷ்டம் போன்று உருவாகும் ரத்தஸ்தம்பம் எனும் நோயை உண்டாக்குகின்றது. ரத்தவாதம், வாத ரக்தம், ஆட்யவாதம், வாதபலாஸகம், குடம் என்ற மாற்றுருவங்கள் இதற்குண்டு.

இவ்வியாதி உண்டாகும் காலத்தில் உடல் முழுவதும் தளர்ச்சி, பூட்டுக்களில் அயர்வு, வலி, நிறம் கருத்துப்போதல், கன உணர்ச்சி, மறத்துப்போதல், ரத்தக்கட்டு இவை அறிகுறிகளாகத் தோன்றும்.

முதலில் இந்நோய் தோலையும் தசையையும் பற்றி உண்டாகும். பிறகு எலி விஷம் போலப் பரவி எல்லா தாதுக்களையும், பிடிக்கும். வாதத்தையோ பித்தத்தையோ கபத்தையோ ஏதாவது ஒரு தோஷத்தை மாத்திரம் காரணமாகக் கொண்டு ஏற்படும் நோய் ஸாத்யமாகும். இரு தோஷச் சீர்கேட்டரல் ஏற்படுவது யாப்யம். ஸந்நிபாதத்தால் ஏற்படுவது அஸாத்யம். துர்நாற்றத்துடன் சீழ் கலந்த ரத்தம் வடிந்தும் ரத்தம் மிகவும் உரைத்து அர்புதம் ஏற்பட்டும் உள்ளது மிகவும் அஸாத்யம்.

சிகித்ஸை சீந்தில், தண்ணீர்விட்டான். அதிமதுரம், நெல்லி முள்ளி. இவைகளின் கஷாயம், சதுர்வர்ககஷாயம் எனப்படும். ரத்தஸ்தம்பத்தைப் போக்க வல்லது, சிற்றுமுட்டி, தீர்முள்ளி வேர், நெல்லிமுள்ளி, சீந்தில், கரும்பு, தண்ணீர் விட்டான் கிழங்கு இவைகளின் கஷாயம் அதிமதுரத்தூள் கலந்து சாப்பிட நல்லது, இது ஷட்வர்க்க கஷாயமாகும். தண்ணீர் விட்டான் கிழங்கு, புத்தரிச்சுண்டைவேர், நெல்லிமுள்ளி. சீந்திற்கொடி, கோரைக் கிழங்கு திரிபலை. பேய்புடல் இவைகளின் கஷாயம் நெய் சேர்த்துச் சாப்பிடலாம். தோஷகோபம் அதிகமாயிருந்தால் சிற்றாமணக் கெண்ணெய்யை பசுவின் பாலில் கலந்து சாப்பிடலாம். கடுக்காய் கஷாயத்தில் நெய் சேர்த்தும் சாப்பிடலாம். தண்ணீர் விட்டான் கிழங்கு, சீந்திற்கொடி இவைகளின் கஷாயத்துடன் சேர்த்துக் காய்ச்சிய பாலில் சிற்றாமணக்கெண்ணெய் கலந்து சாப்பிட்டு வரலாம், சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, விலாமிச்சை வேர், பர்படகம், வெட்டிவேர், சந்தனம், சிற்றுமுட்டிவேர், தண்ணீர் விட்டான், நன்னாரிவேர். இவைகளின் கஷாயத்தில் சர்க்கரையும் நெய்யும் சேர்த்தோ நெய்யும் தேனும் சேர்த்தோ, செய்யும் இந்துப்பும் சேர்த்தோ சாப்பிட ஜ்வரத்துடன் கூடிய வாத ரத்தம் தணியும்.

சீந்திற்கொடி 6 பங்கு. சிற்றுமுட்டிவேர் 4 பங்கு. தேவதாரு 2 பங்கு இவைகளின் கஷாயத்தில் சர்க்கரையும் ஜீரகத்தூளும். சேர்த்து அல்லது பாலும் சர்க்கரையும் அல்லது நெய்யும் ஜீரகத் தூளும் சேர்த்துச் சாப்பிட உடல் வலி மிகுந்த நிலையில் நல்லது. இது அமிருதோத்தரம் எனப்படும்.

சீந்திற்கொடி, சிற்றுமுட்டிவேர், இவை வகைக்கு 2 பங்கு. தேவதாரு, அரத்தை, கருங்குறிஞ்சி வேர், சிற்றுமணக்கின் வேர் வகைக்கு ஒருபங்கு, இவைகளின் கஷாயத்துடன் பால் சேர்த்துக் காய்ச்சி சர்க்கரை சேர்ந்தோ கஷாயத்துடன் ஜீரகத்தூளும் நெய்யும் சேர்த்தோ சாப்பிட நல்லது

அரத்தை, சிற்றுமணக்கு வேர், பூனைக்காலிவேர், கருங் குறிஞ்சி வேர், தேவதாரு, கச்சோரம், தண்ணீர் விட்டான், கோரைக்கிழங்கு ஆடாதோடை வேர். நீர்முள்ளி வேர்; சுக்கு, சீந்திற்கொடி, அதிவிடயம் இவைகளின் கஷாயம் நெய்யும் நல் லெண்ணெய்யும் சேர்த்துச் சாப்பிட முழங்கால் தொடை, விலா, முதுகு, இடுப்பு, தாவடை இவைகளில் வலியுடன் காணும் வாத ரோகங்களில் மிக நல்லது ராஸ்னாதி கஷாயம் எனப்படும்.

அமிருதாதி தைலம் : சீந்திற்கொடிச்சாறு, அல்லது கஷாயம் 6 லிடர் வாழைப்பழம் அதிமதுரம், கோஷ்டம், கோரைக் கிழங்கு, தகரவிதை, சந்தனம், நன்னாரி, தாமரை கேஸரம் அமுக்கராக் கிழங்கு, திரிபலை, ஏலரிசி, தாமரைத்தண்டு, மஞ்சிட்டி, நிலப் பனைக்கிழங்கு, கச்சோாரம், ஜடாமாஞ்சி, கல்பாசி, மரமஞ்சள், லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, வெட்டிவேர், ஆலம்மொக்கு, அரசம் மொக்கு அத்திமொக்கு, இச்சிமொக்கு, விலாமிச்சைவேர், இலுப்பைப்பூ. நீலோத்பலக் கிழங்கு காவி. கடுகுரோகிணி, அஞ் சனக்கல் இவை வகைக்கு 60 கிராம், நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் 1½ லிடர் இவைகளைத் தைலமாகக் காய்ச்சி உபயோகிக்கலாம். நஸ்யம், அப்யங்கம் தாரை முதலிய வைகளுக்கும் உள்ளுக்குச் சாப்பிடுவதற்கும் நல்லது. கடுமையான வாத ரத்தத்தில் மிகவும் நல்லது.

சந்தனாமலகாதி தைலம் : சந்தனம், நெல்லிக்காய், விலா மிச்சை வேர், அதிமதுரம் இவை வகைக்கு ஒரு பங்கு சீந்திற் கொடி 4 பங்கு இவைகளின் கஷாயம், மஞ்சிட்டி, கோஷ்டம், அதி மதுரம், சந்தனத்தூள், விலாமிச்சை வேர், வெட்டிவேர், இவை கல்கம், தேங்காய் எண்ணெய் நல்லெண்ணெய் சேர்த்துத் தயாரித்த தைலம் மிகவும் நல்லது.

முஸ்தாமிருதாதி தைலம் கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, சிற்றுமுட்டிவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகளின் கஷா யம், சந்தனம் விலாமிச்சைவேர் நன்னாரி, கோரைக்கிழங்கு, அதி மதுரம், கோஷ்டம், வெள்ளை லோத்ரப்பட்டை, சிற்றுமுட்டி வேர் இவை கல்கம், நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்

எண்ணெய்க்குச் சமம் பால் சேர்த்துத் தயாரித்த தைலம் அப்யங்கம், தாரை முதலிய வெளியுபயோகத்திற்கும் உள்ளுபயோகத்திற்கும் நல்லது.

பிண்ட தைலம். நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்; நன்னாரி, வெள்ளைக்குங்கில்யம், மஞ்சிட்டி, தேன் மெழுகு இவை கல்கம் ஜலம் அல்லது சிற்றாமுட்டி கஷாயம் அல்லது காடி அல்லது நன்னாரி சீந்திற்கொடி கஷாயம் (எண்ணெய்க்கு நான்கு பங்கு) இவைகளைத் தைலமாகக் கய்ச்சி தலை தவிர மற்ற பாகங்களில் தேய்த்துவிட எல்லா வாத ரத்த விகாரங்களையும் போக்கும்.

காரஸ்கர கிருதம் சேங்கொட்டை விதையை முளையும் காம்பையும் நீக்கிப் பாலில் அரைத்து நெய்யுடன் கலந்து காய்ச்சி எடுத்து மேல் தடவிவிட ரக்தஸ்தம்பம் நிற்கும். இதில் தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறும் சேர்த்துத் தயாரித்த உள்ளுக்கும் சாப்பிடலாம்.

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

# பாண்டு ரோகம் (3)

ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ B. வைத்யநாதன், சென்னை.

'' அக்ந்யதிஷ்டா நமந்நஸ்யக்ரஹணாத் இரஹணீமதா |
நாபேரு பர்யக்நிபலே நோபஷ்டப்தோப ப்ரும்ஹிதா. ||
அபக்வம் தாரயத்யந்நம் பக்வம் ஸ்ருஜதி பார்ச்வத : |
துர்பலாக்நி பலாத்வந்நம் ஆமமேவ விமுஞ்சதி. ச சி. 15-56-57.

என நாபிக்கு மேல் க்ரஹணீ என்ற அக்நியின் ஸ்தானம் அமைந்துள்ளதாக சரகர் கூறுகிருர். கீழே குறிப்பிட்டுள்ள மேற்கோள் ஒன்றில் அக்நியை ஸூர்யனுக்கு ஒப்பிட்டார் பேளர். மிகச் சிறிய உருவில் அமைந்து கிரணங்களால் ஸூர்யன் போன்று அந்த அக்நி ஆஹாரப் பகுதிகளை கிரஹிப்பதாகவும், வற்ற வைப்பதாகவும் விளக்குகிருர். இந்த விளக்கப்படி காயாக்நி ஒரே இடத்தில் நிலை கொண்டுள்ளதா ? அல்லது நாபி என்ற சொல்லுக்கு பல வந்து சேரும் இடம் எனப் பொருள் கூறி அங்கு அதிஷ்டான தேவதை போல அமைந்துள்ளது அக்நி என அக்நி சரீரத்தில் எல்லாப் பகுதிகளிலும் வ்யாபகமாக உள்ளது என விளக்கம் கூறுவதா ? பல வந்து சேரும் இடம் என்பதால் ரஸ தாதுவிற்கும் முன் நிலையான ஆஹார பாகம் வியாபிக்கும் சரீரத்தின் எல்லா ஸ்ரோதஸ்ஸுக்களையும் கிரஹித்துக் கொள்ள வேண்டும். அவ்விதம் ரஸதாது முதலான அடுத்தடுத்ததாதுவாகப் பரிணமிக்க நிலையான பாகத்தை அடைய வேண்டுமாயின் அந்தந்த ஸ்ரோதஸ்ஸுக்களின் ஆகாரப்பகுதி குறிப்பிட்ட கால வரம்புவரை தடுத்து நிறுத்தப்பட்டு பக்குவப்படுத்தப்பட வேண்டும். ''அன்னஸ்ய க்ரஹணாத் க்ரஹணீமதா அபக்வம் தாரயத்யன்னம் '' என்று அன்னத்தை கிரஹித்து பக்குவமாக வேண்டியவற்றைப் பக்குவமடையச் செய்து, பக்குவமான பகுதியை பக்கவாட்டில் வெளியேற்றி அபக்குவமான அம்சத்தை நிறுத்தி விடுதல் என்ற செய்கை நாம் உண்ணும் உணவு விஷயத்தில் மட்டுமல்ல. '' தாதவோ ஹி தாத்வாஹாரா: என தாது பரிணாமத்திலும் நிகழவேண்டிய இன்றியமையாத '' ஓர் காரியம். எனவே கிரஹணீ என்பதற்கும் வியாபகமான பொருள் தான் கூறவேண்டும். இங்கு இவ்விதம் தடுத்து நிறுத்துவது கிரஹணீயின் பணி. பாகம் அக்நியின் பணி. இவ்விதமான விளக்கப்படி கிரஹணீ, அக்நி என்பவைகளை சரீரத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருப்பதாக விளக்க வேண்டியவை என்ருகிறது. இவ்விதமாகத் தடுத்து நிறுத்தும் பகுதியில் ஏற்பட்ட சீர்கேடே

ஆரம்பநிலையில்'' விஸ்ரம்ஸயத்யதோ$ப் தாதும் ஹத்வா தேனைவ சாநலம்" என அதிஸ்ராத்திற்குக் காரணமாகவும், பின் சென்று ''அதிஸாரேஷு யோ நாதியத்நவாந் க்ரஹணீகத: என்ற கிரஹணீரோகமாகப் பரிண மிப்பதாகவும் நாம் காண் கிறோம்.

பித்தமும் அக்னியும் ஒன்று என்ற கொள்கைப்படியும் ''ப்ரா ணோதகாந்நரஸருதிர மாம்ஸ மேதோ$ஸ்தி மஜ்ஜ சுக்ரமூத்ர புரீஷஸ்வேத வஹாநி ஸ்ரோதாம்ஸி, வாதபித்த ச்லேஷ்மணாம் புந: ஸர்வ சரீர கராணாம் ஸர்வாணி ஸ்ரோதாம்ஸ் யயனபூதாநி.'' (ச வி. 5-6) எனப் ப்ராணாதிகளைக் கொண்டு செல்லும் 13 வகை ஸ்ரோதஸ்களுடேயும். பித்தம் சஞ்சரிப்பதால் அக்நி சஞ்சரித்துக் கொண்டிருப்பதாக ஆகிறது. இது போன்ற தத்துவங்கள் மிகவும் பொறுமையுடன் ஆராயப்பட வேண்டியவை. ஆகவேபேளரால்'' ''அயம் புருஷ: ரஸஜன்மா, ரஸஜீவீ, ரஸஜ்வலந:, ரஸஸமதிக:, ரஸஜீவ நச்ச பவதி'' என மிக உன்னதமான நிலையில் வர்ணிக் கப்படும் ரஸதாதுதான் பாண்டு ரோகத்தைப் பொருத்தவரை, ஓஜஸ் எனப்படும் என்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டி வருகிறது. இந்நிலையில் பாண்டு ரோகத்தின் ஸம்பிராப்தியை ரஸவஹஸ் ரோதஸ்களிலிருந்து ஆராய வேண்டும்.

ஆயுர்வேத ரீதியில் யக்ருத்தும்ப் லீஹாவும் தான் ரக்தவஹஸ் ரோதஸ்களின் மூலஸ்தானம். இந்தஸ்ரோதஸ்களின் கெடுதி விசேஷமாகக் காமாலை நிலையில் காணப்படுகின்றது. அதற்கேற்ப காமாலை ரக்ததுஷ்டியால் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.

அதேபோல் ''ரஸ வஹாநாம் ஸ்ரோதஸாம் ஹ்ருதயம் மூலம் தச ச தமந்ய: ''என ஆயுர்வேத ஸித்தாந்தப்படி ஹ்ருதயம் ரஸ வஹஸ்ரோதஸ்களின் மூலஸ்தானம். ரஸசேஷாஜீர்ணம் போன்ற ரஸதாது சம்பந்தப்பட்ட ரோகநிலைகளில் ''ஹ்ருத்வ்யதா'' போன்ற ஹிருதயத்தைப்பற்றிய கோளாறுகளை நாம்காண்கிறோம். இன்றைய ஆராய்ச்சியும் இந்த ரஸ வஹஸ் ரோதஸ்களில்சஞ்சரிக் கும் சிவந்த திரவமான ரக்தத்தில் 40 க்கும் அதிகமான பல்வேறு அம்சங்கள் அமைந்திருப்பதாக விளக்குகிறது. ஸப்ததாதுக் களுக்கும் வேண்டிய ஆஹாரப் பொருள்கள் ஆஹாரத்தில் நின்றும் கிரஹிக்கப்பட்டு ரஸம் என்ற பெயருடன் ஹ்ருதயம் என்ற ரஸ வஹஸ் ரோதஸ் வழியே சுற்றிச் சுற்றி அடுத்தடுத்த தாதுவாக மாறுகிறது. இதைத்தான் ஸுச்ருதர்.

''ஸ கலு ரஸ: தமநீரனுப்ரவிச்ய க்ருத்ஸ்நம் சரீரம் அஹர ஹஸ்தர்ப்பயதி, வர்த்தயதி யாபயதி சாத்ருஷ்ட ஹேது கேந

கர்மணு | ஸ சப்தார்ச்சிர்ஜல ஸந்தாநவதணுநா விசேஷேண அநுதா வத்யேவ சரீரம் || ஸ கலுரஸ: த்ரீணி த்ரீணி கலா ஸஹஸ்ராணி பஞ்சதச சகலா: ஏகைகஸ்மின் தாதௌ அவதிஷ்டதே | ஏவம் ரஸ: மாஸேந சுக்ரீபவதி நருணும் | ஸ்த்ரீணும்ச ஆர்த்தவம் | ஸகலு த்ரவானுஸாரீ ஸ்நேஹந ஜீவந தர்ப்பண தாரணுதி பிர்குண விசேஷை: ஸௌம்ய இத்யவகம்யதே ||. என ரஸம் கீழ் மேல், குறுக்கு என சரீரத்தின் எல்லா அவயவங்களிலும் ஊடுருவிப் பாய்ந்து தன் ஸௌம்ய குணத்தால் அடுத்தடுத்த தாதுக்களுக்கு நைப்புத் தன்மையை அளித்துப் போஷித்து உயிர்நாடியாகி நிர்வஹிக்கிறது. இந்தரஸம் ஒவ்வொருதாதுவிலும் சுமார் 5 நாட்கள் தங்கிப் பக்குவப் படுத்தப் பட்டு ஒருமாத அளவில் சுக்ரதாது வாகவும், ஆர்த்தவமாகவும் மாறுகிறது என விளக்குகிருர்.

இவ்விதம் பக்குவப் படுத்தப்பட்டு அடுத்ததாது வாக பரிணமிக்கும் சமயம் அந்தப்பகுதி அதற்கேற்பட்ட ஸ்ரோதஸ்ஸின் வழியே பிரித்து அனுப்பப்படுகிறது. இந்த சமயம் அந்தப்பிரிவுகளைத் தாங்கிச்செல்லும் தாதுவஹஸ்ரோதஸ்கள் நல்ல முறையில் அமைந்திருக்கவேண்டும். எனவே அடுத்தடுத்ததாதுவாகப் பரிணமிப்பது ரஸதாது, ரஸவஹஸ்ரோதஸ் இவைகளின் ஸம்பன்னதாவைப் பொருத்தது. இரண்டுமோ இரண்டில் ஒன்ரோ சீர்குலைந்தாலும் தாது ஸம்வஹநம் சீர்குலைகிறது. இந்தச் சீர்குலைவுதான் பாண்டு ரோகத்தை உண்டுபண்ணுகிறது. இங்கு சீர்குலைவு ரஸதாதுவுக்கா அல்லது ரஸவஹஸ் ரோதஸுக்கா? ''ஸ்ரோதாம்ஸி ஸ்ரோதாம்ஸ்யேவ தாதவச்ச தாதூநேவ ப்ரதூஷ யந்திதுஷ்டா: ''என ஸ்ரோதஸ்கள் ஸ்ரோதஸ்களையும் தாதுக்கள் தாதுக்களையுமே கெடுக்கும். ஸ்ரோதஸ் தாதுவையோ, தாது ஸ்ரோதஸ்ஸையோ கெடுக்காது என்பது நியமம்.

பாண்டு ரோகத்தில் ரஸதாதுவின் குணங்கள் க்ஷயத்தை அடைவதாகக் கீழே கண்டோம். அதிலும் ''ஸ்நேஹாம்சம்'' என்ற எண்ணெய்ப்பசை மிகக் குறைகிறது. அப்பொழுது சரீரத்தில் ரஸவஹஸ்ரோதஸ்ஸான ஹ்ருதயத்தின் வழியே சஞ்சரிக்கும் திரவமான ரஸபாகம் எண்ணெய்ப்பசையற்று வறண்டு சுற்றுகிறது. மேலும் பித்தவர்த்தகமான ஆஹாரங்களால் பித்தம் அதிகரித்து இருக்கும் போது ''பித்தம் துஸ்வேத ரக்தயோ:'' என ரக்தம் அதிகரித்து இருக்கவேண்டி யிருப்பினும் ரஸத்துடன் சேர்ந்து சஞ்சரிக்கும் அந்த பித்தம் ரஸத்திலுள்ள ஸ்நேஹாம்சத்தைப் பெருவாரியாகக் குறைத்து விடுகிறது. ரக்தமாக மாறும் ரஸதாது பாகங்களை அதில் உண்டாகவும் விடுவதில்லை. இந்நிலை

சக்ரபாணிதத்தர் வியாக்கியானத்தில் "ஓஜஸ ஏவ தசகுணு:, க்ஷீரஸமாணு, உக்தாஸ்தே க்ஞேயா : | ஓஜஸ : க்ஷயேணைவ ஸ்நேஹ க்ஷயே லப்தே புந : ஸ்நேஹா பிதாநம் விசேஷ க்ஷயாபி தாநார்த்தம் | யத்யபி பித்தரக்தயோ ரேகயோ நித்வாத் பித்தேந ரக்த விருத்திர்பாவ்யா | ததாபீஹ ரக்தக்ஷயோரக்த போஷக ரஸஸ்ய பித்தேந க்ஷபணுத் ரக்தபோஷக ஸாரபாகானுத் பாதாச்ச | " என விளக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஸ்நேஹாம் சத்தைக் குறைத்து, உட்பொருள்களில் அடர்த்தியைக் குலைத்து உடலையே வெல வெலக்க வைப்பதால் இந்தப்பித்தம் "ஸந்தி பந்தாம்ஸ்து சிதிலாந்யத் கரோதி விகாசிதத்" | என விகாசிகுணம் படைத்திருக்கிறது. "சக்ருன் மூத்ரானிலாச்சைவ ரக்தம்மாம் ஸாதயச்ச ஷட் | வித்யாந்நிபத்தநானீதி தாநி தேஹேஷு தேஹிநாம்" !!என கட்டுகள் போன்ற ரக்தம் முதலான 6 தாதுக்கள் வாத விண் மூத்திரங்கள் ஆகியவையும் மேற்கூறிய விகாசி குணத்தால் பாதிக்கப்படுகின்றன. இவ்விதம் ஸ்நேஹாம்சம் நழுவுவதைத்தான் பல விஸ்ரம்ஸம் பலக்ஷயம் எனக் கூறுகிறுர். இந்நிலையை

"அபிகாதாத் க்ஷயாத் கோபாத் சோகாத் யாநாச்ச்ரமாத்க்ஷுத :
ஓஜ: ஸம்க்ஷீயதே ஹ்யேப்யோ தாதுக்ரஹண நி: ஸ்ருதம்
தேஜ : ஸமீரிதம் தஸ்மாத் விஸ்ரம்ஸயதி தேஹிந : |
தாதவோ க்ருஹ்யந்தே யைஸ்தாநி தாதுக்ரஹணுநி
தாதுவாஹீநி ஸ்ரோதாம்ஸி |

தேப்யோ நிஸ்ஸ்ருதம் நிர்கதம் ஸர்வதாது ஸ்நேஹபரம்பரா ருபேண"! எனதாதுக்களை கிரஹித்துக் கொள்ளும் ஸமயம் அந்தஸ்ரோதஸ் ஸுக்களிலிருந்து மிகமிக ஸாரமானஸ்நேஹாம் சம் கசிந்து போன்று வெளியேறிக் குறைவதாக மிகத்தெளிவாக ஸுச்ருதர் விளக்குகிறுர். இங்கு இயற்கைக்கு எதிராகக் கசிந்து சிதையும் ஓஜஸ்ஸைத்தடுத்து நிறுத்துவது அவசியமாகிறது. இது இரண்டுவிதமாக ஸாத்யமாகலாம்.

1. எண்ணெய்ப் பசையுள்ள ஓஜஸ் தீக்ஷ்ணமானபித்தத்தின் சேர்க்கையால்தான் கொழ கொழப்பை இழந்து நீர்த்து வெளியேறுவதாயின், கொழ கொழப்பை இழக்கவிடாதும் அதை நீர்க்க விடாதும் செய்வதன் மூலம் தடுக்கலாம்.

2. தாதுவஹஸ்ரோதஸ்ஸுக்கள் அதிகம் விரிந்து கொடுத்து அவற்றை வெளியேற்ற உதவும் பக்ஷத்தில் அந்த ஸ்ரோதஸ் ஸுக்களைச் சுருக்குவதன் மூலம் அவற்றைத் தடுத்து நிறுத்தலாம்.

இவ்விதம் ரஸதாது திரவித்தும் தாதுவஹஸ் ரோதஸ்கள் விரிந்தும் இருப்பதால்" ஸ்தம்பநம் ஸ்தம்பயதியத் கதிமந்தம் சலம்" என ஸ்தம்பநசிகித்ஸை மூலம் திரவித்த பொருள்களை இறுகவைக்கவும் விரிந்தவைகளைச் சுருங்க வைக்கவும் அவசிய மேற்படுகிறது. மேலும் ஸ்தம்பநம் என்று மட்டும் அமையாது. ஸ்நேஹாம் சத்தைப் போக்கி ரஸத்தை நீர்க்க வைக்கும் தீக்ஷ்ண மான பித்தத்தின் விகாசித் தன்மையையும் குறைத்தாக வேண்டும்.

"பித்த க்ஷராக் நிதக்தாயே வம்யதீஸாரபீடிதா: |
விஷஸ்வேதாதி யோகார்த்தா : ஸ்தம்பநீயாநிதர்சிதா : ||

என உத்ரிக்தமான பித்தத்தின் செய்கையை அக்நி, க்ஷாரம், இவற்றின் செய்கையுடன் ஒப்பிடுகிருர். பாண்டு ரோகத்தில் பித்தம் உண்டு பண்ணும் கெடுதியும் இதுதான்.

அக்நி தாஹத்தைப் போல துஷ்டபித்தமும் சரீரம் முழுவதும் "ப்லுஷ்ட, துர்தக்த, அதிதக்த" என்ற நிலைகளை உண்டுபண்ணி விடுகிறது. சூடு அதிகம் தாக்காது கஞ்சிக் கொப்புளம் கிளம்பும் அளவிற்கு எரிந்த நிலையை "ப்லுஷ்ட" எனவும், அதற்கு அடுத்து நடுத்தரமாகவோ அதிகமாகவோ எரிந்த நிலையை முறையே "துர்தக்த", "அதிதக்த" எனவும் ஓரளவு கூறலாம்.

"சரீரே ஸ்விந்ந பூயிஷ்டே ஸ்விந்நம் பவதி சோணிதம் | ஸு ஸூ 12-29 எனப்போலத்தில் போல பாண்டு ரோகத்திலும் பித்தத்தால் உடல், அதனுள் அமைந்த திரவங்கள் அனைத்துமே கன்னி அரைகுறை வேக்காடு அடைந்தது போன்ற ஓர் நிலையை அடைகின்றன. இந்நிலைக்கேற்ப

"ப்லுஷ்டஸ் யாக்நி ப்ரதபநம் கார்ய முஷ்ணம்த தௌஷதம் |
சரீரேஸ்விந்ந பூயிஷ்டே ஸ்விந்நம் பவதி சோணிதம் ||

தஸ்மாத் ஸ்கயதி ஹ்யுஷ்ணம் நது சீதம் கதஞ்சன" ஸு ஸூ : 20-21 என உஷ்ணமான சிகித்ஸை அளிக்கப்படுகிறது. இந்த அடிப்படையில்தான் தந்தீ, சித்ரகம், ஸ்வர்ணக்ஷீரீ, த்ரிகடு, திப்பிலி போன்ற திரவியங்கள் சேர்ந்த யோகங்கள் உபயோகப் படுத்தப்படுகின்றன.

இதற்கு அடுத்த துர்தக்த நிலைக்கேற்ப தாடிமம் (மாதுளை), திரிபலா, மண்டூரம், லோஹம், மஞ்சள், திராக்ஷை, முஸ்தா போன்று பெரும்பாலும் ஸமசீதோஷ்ணமான திரவியங்கள் சேர்ந்த யோகங்கள் உபயோக மாகின்றன. அதிதக்த நிலைக்

கேற்ற மாதுளை முதலியவைகளோடு முற்றிலும் சீதமும், ஸ்தம்பன குணமும் உள்ள, கடுக்காய், சந்தனம், பேய்ப்புடல், வேம்பு, பர்ப்பாடகம் போன்ற திரவியங்கள் சேர்ந்த மருந்துகள் பயனளிக்கின்றன. மாதுளை, திரிபலைபோன்றவற்றிலுள்ள புளிப்பு அதிகரித்த பித்தத்தின் தரத்தை'' அம்லேந ஸஹஸம்யுக்த ஸதீக்ஷ்ணம் லவணேரஸ: | மாதுர்யம் பஜதேத்யர்த்தம் தீக்ஷ்ண பாவம் சமுஞ்சதி || என்றபடி அடக்கி ஸ்தம்பநரோபண சிகித்ஸையை எளிதாக்குகிறது. தீக்ஷ்ணமான பித்தம் தோஷமாகவும், ஸௌம்யமான ரஸதாது தூஷ்யமாகவும் அமைந்திருப்பதால் ''அதுல்ய தூஷ்யம்'' என்ற இலக்ஷணப்படிப் பொதுவாகப் பாண்டு ஸுகஸாத்யமான ரோகம்தான்.

பெரும்பாலும் துவர்ப்பு, கசப்பு, தித்திப்புச்சுவை பொருந்திய திரவ்யங்கள் சேர்ந்த மருந்துகள் பித்தத்தின் தீக்ஷ்ண குணத்தைக் குறைப்பதுடன், ''சீதம் மந்தம் ம்ருதுஸ் நித்தம் ரூக்ஷம் ஸூக்ஷ்மம் ஸ்திரம் த்ரவம் | யத்திரவ்யம் லகுசோத்திஷ்டம் ப்ராயஸ்தத்ஸ்தம்பநம் ஸ்மிருதம் || என ஸ்தம்பந குணம் படைத்திருப்பதால் ரஸதாதுவான ஓஜஸ்ஸில் நின்றும் அளவு மீறி சிதையும் ஸ்நேஹாம்சத்தைத் தடுத்து நிறுத்தி உதவுகின்றன. பாண்டுவில் அதிகமாக உபயோகப்படும் லோஹம், மண்டூரம் முதலியன மேற்கூறிய திக்த வர்க்கத்தைச் சேர்ந்தவையே பாண்டுவில்போல இந்த லோஹப் பொருள்களின் உபயோகம் ரஸதாது சீர்கெட்ட மதுமேஹத்திலும் காணப்படுகிறது அங்கு பலவிதமான அயஸ்கிருதிங்கள் கூறப்படுகின்றன இவை அதிகப் பலனளிக்க வல்லவை என்பதை ஸுச்ருதர், ''குஷ்டேஷுமேஹேஷு சபாமயேஷு ஸர்வாங்க சோஷேஷு ச தாருணேஷு | கிருசத்வ மிச்சத்ஸு ச தாருணேஷு, யோகாநிமா நக்ர்யமதிர் விதத்யாத் || எனக்குறிப்பிடுகிருர். திக்தரஸம் பொருந்தி இருப்பதால் மேற்கூறியபடி சிதையும் ஓஜஸ்ஸிற்கு ஸ்தம்பநமாக லோஹம் உபயோகப்படுவதுடன் அதிகம் விகஸிதமான ஸ்ரோதஸ்களை அடைத்தும்; சுருக்கியும் ஓஜஸ்ஸை வெளியேற்ற விடாது தடுத்து நிறுத்துகிறது. இவ்விதம் தடுத்து நிறுத்தப்பட்ட ஓஜஸ் ''ஊஷ்மா ரஸஸ்தோ தஹதி'' என பேளர் குறிப்பிட்டதுபோல் வெப்பமாகப் பயன்பட்டு மேதஸ் முதலியவற்றை நன்கு பக்குவப்படுத்துகிறது. இதைக்காரணமாகக் கொண்டுதான் ஓஜஸ் என்பதற்கு ''ஊஷ்மாணமபி ஓஜ: சப்தேநாபரே வதந்தி'' என ஊஷ்மா அல்லது வெப்பம் எனச் சிலர் பொருள் கூறுகின்றனர். இவ்விதம் ஸம்ப்ராப்தி மிகவிரிவாக அமைந்துள்ளதால் தான் பாண்டுவில் மேற்படி கிரமமான சிகித்ஸாபத்ததி நிர்ணயிக்க முடிகின்றது. மேலும் ரஸத்தில் தங்கிய தீக்ஷ்ணபித்தத்தின் விகாசித்தன்மையைக் குறைக்கவும், திரவித்த நிலையை அதிகரிக்க

விடாமலும் இருக்க பாண்டுரோகியை உப்பில்லாப் பத்தியத்திற்கு உள்ளாக்குகிறோம். இது ஒன்றே அவனுக்கு மிகமிக உதவுகிறது.

"லவண: ஸ்தம்ப ஸங்காத பந்த வித்மாபந: எனக் கட்டுக்களை உடைத்தெரியும் குணம் கொண்ட உப்பு தவிர்க்கப் படுவதால் ரஸதாது முதலிய பற்றியுள்ள க்லேதாவஸ்தை தடுக்கப்படுகிறது. இவ்விதம் "ரஸௌஜ:" என்ற ரஸதாது ஸம்ஹதமானவுடன் அதாவது இருகியவுடன் அதற்கேற்ப ரஸ வஹஸ்ரோதஸ்களும் சுருங்குகின்றன. இவ்விதம் ஓஜஸ்ஸின் ஸ்நேஹாம்சம் தடுத்துக் காக்கப்படுகிறது. இங்கு செய்யப்படும் சிகித்ஸை ரஸதாதுவிற்கும் ரஸவஹ ஸ்ரோதஸ்ஸான ஹ்ருதயம், தமநிகள் ஆகியவற்றிற்கும்தான். நேரடியாக ரக்தத்திற்கோ ரக்தவஹஸ்ரோதஸ்ஸான யக்ருத் ப்லீஹா இவைகளுக்கல்ல. பரம்பரையாக வேண்டுமாயின் "நெல்லுக்கிறைத்தநீர்" போல் அயஸ் போன்றவைகள் ரக்தத்தைப் பெருக்க உதவலாம். ஆனால் ஆயுர்வேத ஸித்தாந்தத்தின் நோக்கு வேறு. நிற்க பாண்டு ரோகத்தில் ஸ்வேதம் நீங்கலாக ஸ்நேகனம் வமனம், விரேசனம் ஆகியவை செய்யப்படுகின்றன. இவ்விதம் சோதந சிகித்ஸை நிறைவேறியவுடன் சமனமான பிரயோகங்கள் உபயோகப் படுகின்றன இப்பிரிவில் பல நிலைகளுக்கேற்ப மருந்துகளை உபயோகிக்க வேண்டிவருகிறது.

---

## ஸ்ரீ தன்வந்தரி ஜயந்தி

சென்ற 3—11—1972 வெள்ளியன்று திருச்சி ஆயுர்வேத ஸபையினரால் ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதர் கோவிலில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ தந்வந்தரி பகவானுக்கு விசேஷ அபிஷேக பூஜைகள் நடத்தப்பெற்றது. இன்று பகவான் ஸ்ரீ தந்வந்தரி உருவில் திருப்பாற் கடலிலிருந்து அம்ருத கலசம் கையிலேந்தி சங்க சக்ரபாணியாக திவ்யௌஷதிகளுடன் அவதாரமான நன்னு ளாகும். நாடெங்கிலும் அன்று ஸ்ரீ தந்வந்தரி ஜயந்தி கொண் டாடப்பெற்றது. திருச்சியில் திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்டின் காரியாலயத்திலும், ரஸ சாலா காரியா லயத்திலும் விசேஷ பூஜைகள் அன்று நடைபெற்றன.

---

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,


MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

## இம்ப்காப்ஸ்

## புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருநதுகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிககும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாககிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்ப்காப்ஸ் மருநதுகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

impcops

maa/IMP/961/M TAM

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

**விற்பனை நிலையங்கள்:** 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, சொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

## சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)


Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.